ptz
psychomotorik-therapie

tamilisch



# PMT உளவியல் பயிற்சி

## உளவியல் பயிற்சி

குழந்தைகள் சிலவேளைகளில் தமது உடலியக்கத்தில் குறைகளை காண்பிப்பார்கள். இதன் மூலமாக அவர்கள் உடல் அசைவுகள் மற்றும் தெளிவுபடுத்தல், கற்றல் நடவடிக்கைகளில் ஒரு குறிப்பிட்ட அளவே திறமை காட்டுகிறார்கள். இதன் மூலம் அவர்கள் சுய நம்பிக்கையற்று காணப்படுகிறார்கள். ஒரு பகுதியினர் தமது செயற்பாட்டினை திட்டமிடுவதற்கோ, அதை செயற்படுத்துவதற்கோ கஸ்டப்படுகிறார்கள். நண்பர்களை தேடிக்கொள்வதற்கோ அல்லது அவர்களுடன் ஒரு சமரசத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கோ அவர்களுக்கு கடினமாகவுள்ளது.

இவ் உளவியல் பயிற்சியானது வளர்ச்சிக் குறைபாட்டுடன் காணப்படும் குழந்தைகளுக்கான ஓர் கல்விப்பயிற்சி ஆகும்.

இவ் உளவியல் பயிற்சியை பெற மருத்துவரின் சிபாரிசு அவசியம்.

## விளக்க ஆய்வு

**நீங்கள் உங்கள் குழந்தையிடத்தில் குறைகளை கண்காணிக்குமிடத்து இவ் விளக்க ஆய்வு உங்களுக்கு ஓர் தெளிவை ஏற்படுத்தும்.**

- சமநிலையில் நிற்றல் மற்றும் உடலையும் மனதையும் ஒன்றுபடுத்ததல் போன்றவற்றில கடினம்
- வரைதல், எழுதுதல் மற்றும் கைவேலைகளில் கடினம்
- சுயநம்பிக்கைக்குறைவு, பயந்த, அடங்கிய அல்லது சிறுபிள்ளைத்தனமான நடவடிக்கைகள்
- மற்றய குழந்தைகளுடன் தொடர்பை ஏற்படுத்துவதில் கடினம்
- அமைதியற்ற மற்றும் இடையுறு செய்யும் பழக்கம், விதிகளை கடைப்பிடிப்பதில் கடினம்

**உளவியல் பயிற்சி விளக்க ஆய்வானது..**

- பொதுவான உடலியக்கப்பரிசோதனை
- தெளிவுபடுத்தப்பட்ட வேலைகளில் உடலியக்கத்தை கண்காணித்தல்
- சுதந்திரமாக விளையாடும்போது கண்காணித்தல்
- குழந்தையின் தற்போதைய நிலை,அதனது முன்வரலாறு சம்மந்தமான கலந்துரையாடல்

இவ் விளக்க ஆய்வின் அடிப்படையில் குழந்தைக்கு உளவியல் பயிற்சி தேவையா என பெற்றோருடன் சேர்ந்து முடிவெடுக்கப்படும்.

## உளவியல் பயிற்சி: விளையாடு, வெளிப்படுத்து, செயல்படுத்து

உளவியல் பயிற்சியில் கொடுக்கப்படும் வேலைகள் மூலமாக குழந்தையின் தனிப்பட்ட வளர்ச்சி, அதனுடைய பிரத்தியேகமான விளையாட்டு மற்றும் உடலியக்க பழக்கவழக்கம், அதனது பலம் மற்றும் மகிழ்ச்சி போன்றவற்றை தெளிவுபடுத்துகிறது.

இவ் உளவியல் பயிற்சியில் நாம் குழந்தைகளுக்கு உடலியகத்தை தூண்டும் பொருட்கள், விளையாட்டுக்கள், இசைக்கருவிகள், விடீட பொருட்கள் மற்றும் கைவேலைப்பொருட்கள் போன்றவற்றை கையாளுகிறோம். இவற்றின் மூலம் குழந்தையானது பாதுகாப்பான சூழலில் தனது திறமைகளையும் எல்லைகளையும் அறிந்துகொள்கிறது. நாளடைவில் தனது திறமை-களை அதிகரிப்பதோடு தனது சிரமங்களை நிவர்த்தி செய்யவும் கற்றுக்கொள்கிறது.

உடலியக்க மற்றும் உருவகவிளையாட்டுக்கள் மூலமாக தனது சந்தோ'த்தையும், உணர்வை-வயும் மற்றும் முரண்பாடுகளையும் வெளிப்படுத்தவும் செயற்படுத்தவும் கற்றுக்கொள்கிறது.

இவ் உளவியல் பயிற்சிக்கு குழந்தைகள் தனித்தனியாகவோ அல்லது சிறு குழுவாகவோ சேர்க்கப்படுவார்கள்.

## குழந்தைக்கு பின்வருவனவற்றில் பயிற்சி தரப்படுகிறது

- மென்னியக்கங்கள் (பென்சில், கத்தரிக்கோல் கையாள்தல்), வல்லியங்கங்கள் (துள்ளுதல், பாய்தல்)
- உடல்உணர்வுகளையும் புலன்உணர்வுகளையும் வித்தியாசப்படுத்துதல்
- பிரச்சினைகளை தீர்த்தல், செயல்கள், பொருட்கள் போன்றவற்றுடன் பழகுவதில் புதிய உத்திகளை கையாள்தல்
- சுயசெயற்பாடு மற்றும் தனித்தியங்குதல்
- தொடர்புப்பரிமாற்றம் மற்றும் சமூகத்திறனை மேம்படுத்தல்
- சுயநம்பிக்கையை வலுப்படுத்தல்
- தனிப்பட்ட திறமைகளை கண்டறிதலும் அதை வலுப்படுத்தலும்

## இலக்கு: உடலியக்கம் மற்றும் சமூகப்பழக்கவழக்கங்களை மேம்படுத்தல்

இவ் உளவியல் பயிற்சியானது குழந்தைகள உடலியக்கம் மற்றும் உணர்ந்துகொள்ளல் போன்ற துறைகளில் ஊக்குவிக்கிறது. அதேவேளை ஒரு குழந்தை தனது நாளாந்த நடவடிக்கைகளை சமாளிக்கும் முகமாக சமூக மற்றும் உணர்வுபூர்வ வளர்ச்சிக்கும் உறுதுணையாக நிற்கிறது.

பெற்றோர்களும் இதில் உள்வாங்கப்படுவதால், ஆலோசனைக் கலந்துரையா-டல்களின் மூலமயாக தமது குழந்தைக்கு தேவையான நன்மைபயக்கும் விடயங்களை கற்றுக்கொள்கிறார்கள்.



**Stiftung ptz**
Benzburweg 22
4410 Liestal
Tel. 061 926 63 00
sekretariat@ptz-bl.ch

ptz-bl.ch